6th August 1966]

போன்ற பொருள்களை ரயிலில் ஏற்றிச் செல்வதற்குச் சலுகை அளிப்பது, மண் வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் மூலம் மண் பரிசோதனை செய்துதர உதவி புரிவது, நில வரியையும் தண்ணீர்த் தீர்வையையும் தள்ளுபடி செய்வது போன்ற சலுகை களை நமது அரசாங்கமும், இந்திய அரசும் அளித்துள்ளன.

திரு. ஆ. தங்கவேலு : ஒவ்வொரு தாலுகாவிலும் எவ்வளவு உயர்நிலமாக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு தாலுகாவிலும் என்று இல்லை. கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திண்டிவனம் தாலுகாக் களில் அதிகமாக்கி இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்திருக் கிறார்கள்.

தீ விபத்துகள்

* 159 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஜனவரி முதல், மார்ச்சு 31 முடிய தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் எத்தனை தீ விபத்துகள் ஏற்பட்டன ?

(இ) அவைகளினால் ஏற்பட்ட ஆட்சேதம், பொருட்சேதம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (a) During January 1966 to March, 1966 there were 62 fire accidents in Dharmapuri district and 60 fire accidents in North Arcot district.

(b) Five persons lost their lives and the loss of property was estimated at about Rs. 4,33,873.

* 160 கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தீயினால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள புறம்போக்குகளில் உள்ள பனை மரங்களைத் தேவைக் கேற்ற அளவு வெட்டிக்கொள்ள அனுமதிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இதற்கு முன்பு தீயால் பாதிக்கப் பட்ட அரிசனங்களுக்குத் தேவைப்படுகிற, குறைந்தது நாலைந்து பனை மரங்கள், புறம்போக்கு மரங்களை வெட்டிக் கொள்ள அனுமதித்தார்கள். இப்போது தீயால் பாதிக்கப்படுகிற அரிசனங் களுக்கு 30 ரூபாயும், துணி வாங்க 10 ரூபாயும் கொடுக்கிறார்கள். இந்த 30 ரூபாயில் ஒரு மரம்கூட இப்போது வாங்க முடியாது. இதை எந்தக் கணக்கில் வைத்துக் கொடுக்கிறார்கள் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[6th August 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : முன்பிருந்த நிலை எனக்குத் தெரியாது. இப்போது உடனடியாக அவர்களுக்கு 30 ரூபாயும், துணி வாங்கிக்கொள்ள 10 ரூபாயும் கொடுக்கிறோம், உதவியாக. அதோடு இல்லாமல், அவர்கள் வீடு கட்டிக்கொள்ள அல்லது குடிசை போட்டுக்கொள்ள 1,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்க இப்போது திட்டமுண்டு.

Sub-way opposite Central Station

* 161 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) when the proposed sub-way opposite Central Station across Poonamalle High Road is to be taken up for execution; and

(*b*) the details and nature of the construction proposed?

THE HON. SRI V. RAMAIAH : Attention is invited to the paper [a] placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : ரௌண்ட் டாணாவில் கட்டப்பட்டு வருகிற சப்வேயில் கார்ப்பரேஷன் பைப் லைன்களை மாற்றியமைக்காததால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

கனம் சபாநாயகர் : இது சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ளதைப் பற்றியது. நீங்கள் ரௌண்ட் டாணாவிற்குப் போனால் அமைச்சர் எப்படி பதிலளிக்க முடியும்?

பொன்மலை அருகிலுள்ள புறச்சாலை

* 162 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காவிரிப் பாலத்தின் இருபுறமும் பொன்மலை ரயில்வே ஓவர் பிரிட்ஜிலிருந்து கொள்ளிடம் பாலம்வரை (by pass) புறச்சாலைக்குத் தார் போடப்பட்டதா ?

(இ) ஆமெனில் எத்தனை முறை போடப்பட்டது ?

(உ) ஒவ்வொரு முறையும் ஆன செலவு எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) & (*c*) The by pass roads were black topped once in 1963 and an expenditure of Rs. 1,29,842 was incurred on the work.

திரு. து. ப. அழகமுத்து : இந்த பை பாஸ் ரோட்ஸுக்கு இரண்டு கடவை தார் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒருமுறைதான் தார் போடப்பட்டதாகக் கூறுகிறார்கள். இதில் எது உண்மை ?

---

[a] **Printed as Appendix III on page 132.**